# First Activity Report 1940- 42

## காந்தி நிகேதனம்
## ஆரம்ப வேலைகள் பற்றிய அறிக்கையும் ஆதரவாளர்களும்

*(1940 ஏப்ரல் முதல் 1942 மார்ச் முடிய)*

*கல்லுப்பட்டி P.O.*

*மதுரை ஜில்லா*

*"பூரண சுயேச்சை பெற உறுதி கொள்வதும் நிர்மாணத் திட்டம் மூலம் சகல தியாகத்துக்கும் தயாராவதுமே நமது வேலை. இத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதுதான், ஸ்வராஜ்யத்தின் திறவுகோல்" என்கிறார் நம்மை வாழ்விக்க வந்த காந்தியடிகள்.*

*நிர்மாண வேலைகளைத் திடீரென்று இரண்டொரு தினங்களில் செய்துவிட இயலாது. அவற்றை வெற்றியுடன் செய்து முடிக்க நிரந்தரமான ஸ்தாபனங்கள் வேண்டும்.*

*கிராமப் புனருத்தாரண வேலைகளைச் செய்வதற்காகஆரம்பிக்கப் பெற்றுள்ள 'காந்தி நிகேதனம்' என்னும் இந்த ஸ்தாபனத்திற்கு 28-4-'40 தேதியில் திருச்சி* ***டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன*** *அவர்கள் அஸ்திவாரக்கல் நாட்டினார்கள். 12-10-'40 தேதியில் வேதாரண்யம் சர்தார்* ***வேதரத்தினம் பிள்ளை*** *அவர்கள் ஆசிரமத் திறப்பு விழாவை நடத்தி வைத்தார்கள்.*

*சென்ற பதினெட்டு மாதங்களில் இங்கு நடைபெற்ற வேலை விவரங்களைப் பற்றிய சுருக்கமான அறிக்கையை அன்பர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.*

*கதர்*

*கிராமவாசிகள் தங்களுடைய ஓய்வு நேரங்களில் தங்களுக்குத் தேவையான துணிகளைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டு மென்பது எங்கள் நோக்கம். இந்த வேலை திறம்பட நடைபெறுவதற்கு நூற்றல் சம்பந்தமான தொழிலில் போதிய பயிற்சி பெற்ற ஊழியர்கள் பலர் வேண்டும். பருத்தி அரைத்தல், பஞ்சு கொட்டுதல், பட்டை போடுதல், நூல் நூற்றல், ராட்டைகளைச் செப்பனிடுதல் முதலிய வேலைகளில் இங்கிருந்து இதுவரை 25 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இவர்களில் 3 பேர் அகில பாரத சர்க்கா சங்க கதர் உற்பத்தி சாலைகளில் வேலை செய்து வருகிறார்கள். சிலர் தங்கள் சொந்த கிராமங்களிலிருந்து கொண்டு கதர் அபிவிருத்தி வேலைகளைக் கவனித்து வருகின்றார்கள். இங்கு பயிற்சி பெற்ற ராமசாமி என்ற இளைஞர் ராமநாதபுரம் ஜில்லா மலைப்பட்டி கிராமத்தில் சுயதேவைக்கு நூற்கும் தொழிலை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்து வருகின்றார். சர்க்கா சங்கத்தில் சேர்ந்த வரதராஜன் ஆசிரமத்திற்குத் தெற்கே சில கிராமங்களில் ராட்டைகள் சுழலுவதற்குரிய முயற்சியில் ஈடுபட்டிருகின்றார்.*



*நூற்றல் கருவிகளை பெரும்பாலும் ஆசிரமத்திலேயே தயாரித்து வருகிறோம். இது வரை 246 ரூபாய் பெறுமானமுள்ள நூற்றல் கருவிகள் இங்கு தயார் செய்யப்பட்டு அடக்க விலைக்கு விற்கப் பட்டிருக்கின்றன. ஆசிரமப் பட்டறையில் செய்யப்படும் ராட்டை முதலிய சாமான்கள் நேர்த்தியாக இருப்பதுடன் நன்றாகவும் வேலை செய்கின்றன. பட்டைப் பஞ்சு தயார் செய்து விற்று வருகின்றோம். சொந்த உபயோகத்திற்காக நூற்பவர்களுக்கு துணி நெசவு செய்து கொடுப்பதற்காக ஒரு தறி வேலை செய்து வருகிறது. நெசவுக்காரர் குடும்பத்தோடு ஆசிரமத்திலேயே வசித்து வருகின்றார். கதர் வேலை சம்பந்தமாக அவ்வப்போது உதவி செய்து வந்த* ***ஸ்ரீ செல்லச்சாமி, ஸ்ரீ ராமசுப்பு****, வடக்கம்பட்டி,* ***ஸ்ரீமதுரகவி ரெட்டியார்,*** *இவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

# கிராமக் கைத்தொழில்

## 1. கைக்குத்தரிசி

கைக்குத்தரிசியின் உபயோகத்தைப்பற்றி-கிராமங்களில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. ஆசிரமத்தைச் சேர்ந்த ஊழியர்கள் கைக்குத்தரிசியை உபயோகித்து வருகிறார்கள். விற்பனைக்கும் கைக்குத்தரிசி தயார் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## 2. எண்ணெய் ஆட்டுதல்

எண்ணெய் ஆட்டும் தொழில் நம் கிராமங்களில் தொன்றுதொட்டு நடைபெற்று வந்த தொழில்களில் ஒன்றாயிருந்தும் இன்று கிராமங்கள் தங்களுக்கு வேண்டிய எண்ணெய்களுக்கு நகரங்களை எதிர் பார்க்கும் நிலையில் இருக்கின்றன. இந்நிலை மாறி கிராமத்தார்களுக்கு வேண்டியுள்ள எண்ணெயை சுத்தமானமுறையில் கிராமங்களிலே உற்பத்தி செய்ய வேண்டும் என்பது எங்கள் நோக்கம். இது சமயம் கல்லுப்பட்டி கிராமத்திற்கு வேண்டிய எண்ணெய் இங்கேயே உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வூருக்கு வெளியிடங்களிலிருந்து எண்ணெய் வருவது நின்று விட்டது. தங்களுடைய சொந்த எள் கொண்டு வந்து கொடுப்பவர்களுக்கு எண்ணெய் ஆட்டித் தருவதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

## 3. கொம்புத் தொழில்

அயல் நாடுகளிலிருந்து வந்து கொண்டிருந்த செலுலாய்டு சீப்புகள் யுத்தத்தின் காரணமாக வராமல் போகவே சீப்புகளின் விலை கிராக்கியானதுடன், சீப்புகள் நம் நாட்டிலேயே செய்ய வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்க காரியதரிசி ஸ்ரீஜே.ஸி.குமரப்பா அவர்கள் கிராம உத்யோகப் பத்திரிகையில் எழுதி இத்தொழிலை அபிவிருத்தி செய்வதன் அவசியத்தை எடுத்துக் காட்டியிருந்தார்கள். இத் தொழிலில் ஆரம்பத்தில் சில தவறுகளும், சிறிதளவு பொருள் நஷ்டமும் ஏற்பட்ட போதிலும் ஆசிரமத்தைச் சேர்ந்த **ஸ்ரீராஜன் ஆசாரி** அவர்களுடைய குறையாத ஊக்கத்தாலும், உழைப்பாலும், ஆராய்ச்சியாலும் இப்பொழுது கொம்பிலிருந்து நல்ல மாதிரியான சீப்புகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. நல்ல கிராக்கியும் இருந்து வருகிறது. கொம்பிலிருந்து பொத்தான் முதலியன செய்வதற்கும் ஏற்பாடு செய்து வருகின்றோம்.

## 4. தேனீ வளர்த்தல்

ஆசிரமத்தில் இது சமயம் 5 தேன்கூடுகள் தேனீக்களுடன் வேலை செய்து வருகின்றன. தேனீ வளர்ப்பதில் பயிற்சி பெற விரும்புவோர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. தேன் கூடுகள் தனியாகவும், ஈக்களுடனும் விற்பனைக்கும் வைத்திருக்கின்றோம். சுற்றுக் கிராமங்களில் இந்தத் தொழில் பெருகுவதற்கு முயற்சித்து வருகின்றோம். தேனீ வளர்ப்பு சம்பந்தமான வேலைகளைக் கவனித்து வரும் **ஸ்ரீபிச்சை பிள்ளை** அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

## 5. கோழி வளர்த்தல்

அதிகமான முட்டைகள் இடக்கூடிய நல்ல சாதிக் கோழிகள் சிலவற்றை இங்கு வளர்த்து வருகின்றோம். முட்டைகளை மலிவான விலைக்குக் கொடுத்து கிராமங்களில் நல்ல சாதிக் கோழிகள் பெருகுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

**6. சோப்பு-பற்பொடி-தயாரித்தல்**

சுத்தமான சாமான்களைக் கொண்டு சாஸ்திரீய முறையில் இக் கைத்தொழில்கள் செய்யப்பட்டு வருகின்றன. இத் தொழில் அபிவிருத்திக்குரிய ஆலோசனைகளை அவ்வப்போது கூறிவரும் மார்த்தாண்டம், ஸ்ரீ ஜான்ரோஸ் அவர்கட்கு வந்தனம் செலுத்துகின்றோம்.

**முதியோர்களுக்கு எழுத்தறிவிப்பு**

கல்லுப்பட்டி கிராமத்தில் ஒரு இரவுப்பாடசாலை ஏற்படுத்தப்பட்டு ஒழுங்காக நடைபெற்று வருகிறது. இப்பொழுது 25 பேர்கள் படித்து வருகிறார்கள். இந்த வகுப்புகளில் தினந்தோறும் ராமாயணமும் வாசிக்கப்படுகிறது. சுற்றுப்புற கிராமங்களில் முதியோர் கல்வித் தொண்டு செய்து வருபவர்களுக்கு வாசக புத்தகங்களும் கதைப் புத்தகங்களும் கொடுத்து வருகின்றோம். முதியோர் கல்வியின் அவசியம் பற்றி பிரசாரமும் செய்யப்பட்டு வருகிறது. முதியோர் கல்வி வேலைகளில் ஒத்துழைத்த ஸ்ரீபாலசுப்பிரமண்யம், **ஸ்ரீ பிச்சை பிள்ளை, ஸ்ரீ கே.வெள்ளைச்சாமி, ஸ்ரீ தேவசகாயம்** இவர்கட்கு எங்கள் நன்றி உரியதாக.

**வாசகசாலை**

ஆசிரமத்திற்கு சுதேசமித்திரன், ஹரிஜன், கிராம உத்யோக பத்திரிகை, கலைமகள், கல்கி, நல்வழி ஆகிய பத்திரிகைகள் வந்து கொண்டிருக்கின்றன. பத்திரிகை விஷயங்களை கிராம ஜனங்களுக்கு தினசரி சொல்லி வருகின்றோம். வாசகசாலைக்கு புத்தகங்கள் கொடுத்துதவிய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்களுக்கும், கலைமகள் காரியாலயத்தார்களுக்கும் நன்றி கூறுகின்றோம். கிராமவாசிகளுக்கு அவசியமானவைகளாயும், ஊழியர்களுக்குப் பயன்படக் கூடியவைகளாயுமுள்ள அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம் சம்பந்தமான சிறந்த நூல்களடங்கிய புத்தகசாலை ஒன்று இங்கு ஏற்படுத்த வேண்டுமென்பது எங்கள் அவா.

**தீண்டாமை விலக்கு**

ஆசிரமத்தில் நடைபெறும் கூட்டங்களிலும், விழாக்களிலும் ஆசிரமத்தைச் சேர்ந்த ஊழியர்களால் சுற்றுப்பக்க கிராமங்களில் நடத்தப்படும் கூட்டங்களிலும் தீண்டாமையைப் போக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. ஆசிரமக் கிணற்றில் எப்பொழுதும் ஹரிஜனப் பிள்ளைகளும், பெரியவர்களும் வந்து ஸ்நானம் செய்து கொள்வதற்குரிய வசதி செய்திருக்கிறது. ஆசிரமத்திலுள்ளவர்கள் இருப்பிடங்களிலும் உடனிருந்து உண்பதிலும் எந்தவிதமான வேறுபாடின்றி இருந்து வருகின்றார்கள். இது சமயம் ஆசிரமத்தில் மூன்று ஹரிஜனச் சிறுவர்கள் இருக்கின்றார்கள். ஆசிரம ஊழியர்கள் அனைவரும் ஹரிஜன சேவக சங்கத்தாரால் கொடுக்கப்படும் வேலைகளைச் செய்ய எப்பொழுதும் சித்தமாயிருக்கிறார்கள்.

**வைத்திய உதவி**

இந்த வேலையை ஸ்ரீவேலாயுதம் அவர்கள் செய்து வருகின்றார். இவர் கல்கத்தா சென்று ஆயுர்வேத முறையில் ஐந்து ஆண்டுகள் பயிற்சி பெற்று வைத்ய கலாநிதிப் பட்டமும், கவிராஜ் பட்டமும் பெற்றவர். திருவாங்கூரைச் சேர்ந்தவர். ஆசிரமத்திலே சிறிய வைத்தியசாலை ஒன்று இருக்கிறது. இங்கு ஏழைகளுக்கு மட்டும் இனாமாக சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 48 கிராமங்களைச் சேர்ந்த 750 பேர்களுக்கு வைத்தியம் செய்யப்பட்டிருக்கிறது. ரூ.123-4-0 பெறுமானமுள்ள மருந்துகள் இனாமாகவும், ரூ.125-3-0 பெறுமானமுள்ள மருந்துகள் கிரயத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வைத்தியர் கிராம சுகாதாரத்தைப் பற்றியும், சத்துள்ள உணவுகளைப் பற்றியும் சந்தர்ப்பம் ஏற்படும் சமயங்களில் பிரச்சாரம் செய்து வருகின்றார்.

**விசேஷ தினங்களும் கூட்டங்களும்**

காந்தி ஊழியர்களின் கூட்டம் ஓமந்தூர் ஸ்ரீ பி.ராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டம் மூன்று தினங்கள் நடந்தது. பக்கத்து ஜில்லாக்களில் இருந்தும் இக்கூட்டத்திற்கு அன்பர்கள் வந்திருந்தார்கள். காந்திஜியின் கொள்கைகள்-தத்துவங்கள்-வேலைமுறைகள் இவற்றைப் பற்றி ஊழியர்கள் பேசி எண்ணங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டார்கள்.

***காந்தி ஜெயந்தி விழா***

*ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜு* அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புலவர் சிகாமணி கவிராஜ பண்டிதர் *ஸ்ரீ ஜெகவீரபாண்டியன்* அவர்கள் '*காந்தியும் சாந்தியம்*'என்னும் பொருள்பற்றி அரியதொரு உபந்யாசம் செய்தார்கள். புராணிகர் *சங்கிலி சேர்வை* அவர்கள் *காந்திஜியின் அவதார மகிமை*யைப் பற்றி அழகாகப் பேசினார்கள். வத்திராயிருப்பு *ஸ்ரீ கருப்பண பாகவதர்* அவர்கள் தமது சிஷ்யர்களுடன் வந்திருந்து விழாவிற்கு விஜயம் செய்திருந்தவர்கட்கு இசையமுது தந்து மகிழ்வித்தார்கள். கல்லுப்பட்டி கிராமத்திலுள்ள ஹரிஜனங்கள் சுமார் 200 பேர்களுக்கு அன்று உணவளிக்கப்பட்டது.

மதுரை சேவாலய ஊழியர் *ஸ்ரீ ஜகன்னாதன்* அவர்கள் தலைமையில் கல்லூரி மாணவர்கள் பதினைந்து பேர்கள் ஆசிரமத்தில் ஒரு மாதம் வந்திருந்து பக்கத்து கிராமங்களுக்குச் சென்று சேவை செய்து வந்தார்கள். மாணவர்கள் ஆரம்பித்து வைத்த வேலைகள் சில இடங்களில் அங்குள்ளவர்களால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

***ஆசிரம நிலமும் குடிசைகளும்***

ஆசிரமத்திற்குச் சொந்தமாக இது சமயம் 3 ஏக்கர் 85 செண்டு நிலம் இருக்கிறது. இதில் கொட்டாணிபட்டி *ஸ்ரீ ரா.வேலு செட்டியார்* அவர்களுக்குச் சொந்தமான 72 செண்டு நிலத்தை அவர் இனாமாகத் தந்துதவியுள்ளார். கல்லுப்பட்டி *ஸ்ரீ மா.கிருஷ்ணன் சேர்வை* அவர்கள் 27 செண்டு நிலம் இனாமாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்த இரு பெரியார்களுக்கும் எங்கள் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இனாமாகப் பெற்ற நிலத்துடன் 2 ஏக்கர் 86 செண்டு நிலம் ரூபாய் 350 கிரயத்திற்கு வாங்கப்பட்டது.

ஆரம்பத்தில் ஊழியர்கள் சமையல் செய்து கொள்வதற்கும், தங்குவதற்குமாக ஒரு குடிசையும், ஒரு ஓட்டுக் கட்டிடமும் கட்டப் பெற்றது. பின்னும் இடம் வேண்டியதிருந்ததால் இரண்டு குடிசைகள் கட்டினோம். மழைக் காலத்தில் ஏற்பட்ட அனுபவமும், கரையான்களுடைய உபத்திரவமும் சேர்ந்து ஒரு கெட்டியான காரைக்கட்டிடம் எங்கட்கு மிகவும் தேவை என்று தோன்றியது. பல பொது ஸ்தாபனங்களின் தேவைகளை பூர்த்தி செய்து வந்த காலஞ்சென்ற அருங்கொடை வள்ளல், ஸ்ரீ அழகணன் செட்டியார் அவர்கள் குமாரர் *ஸ்ரீ ரெங்கசாமி செட்டியார்* அவர்கள் மூலம் எங்கள் தேவையை இறைவன் நிறைவு செய்திருக்கின்றார். *ஸ்ரீ தாக்கர் பாபா* அவர்களால் அஸ்திவாரக் கல் நாட்டப்பெற்று இன்னும் சிறிது நேரத்தில் *ஸ்ரீ சுப்பராமன்* அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கும் "*ஊழியர் நிலயம்*' என்னும் இந்த அழகிய கட்டிடத்தை தந்துதவிய *ஸ்ரீ எஸ்.ஏ.ரெங்கசாமி செட்டியார்* அவர்களுடைய குடும்பத்தினர்கட்கு இந்த ஸ்தாபனம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது.

***எங்கள் நன்றி***

ஆசிரமத்திற்குப் பொருளுதவி செய்த எல்லா நண்பர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிய எல்லா அன்பர்களுக்கும் அனுதாபிகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆசிரம ஆரம்ப முதல் எங்களுடன் ஒத்துழைத்து வரும் நண்பர் ஸ்ரீ கதிர்வேல் அவர்களுக்கும் நண்பர் ஸ்ரீ குருசாமி அவர்களுக்கும் எங்கள் வந்தனம் உரியதாக.

கோ.வேங்கடாசலபதி
காரியதரிசி